மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தේසියම්

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 0 | குரல்: 108 | வள்ளுவர் ஆண்டு 2054 | சனிக்கிழமை 16.12.2023 | பக்கங்கள் 08



## தேசிய தலைவர் பிரபாகரனை நேருக்கு நேர் எதிர்கொண்டேன்! மகிந்த ராஜபக்ச பெருமிதம்!!



தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேருக்கு நேர் எதிர்கொள்ள எந்தவொரு முன்னாள் தலைவரும் முன்வரவில்லை.

பக்கம்–02



## கஜேந்திரகுமாரிற்கு நெருக்கடி! மட்டக்களப்பில் அம்பிட்டிய தேரோவால் பதற்றம்!!





பக்கம்–05

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரம்! மனித எலும்புக்கூடுகளின் பகுப்பாய்வு இம்மாதம்!!

அகழ்வுப்பணிகள் அடுத்த வருடம் மார்ச் மாதம்...

பக்கம்–04





பக்கம்–06

## தமிழர் தாயகம் எரிந்து கொண்டிருக்கும் போது, உலகத் தமிழர் பேரவை பிடில் வாசிக்கின்றதா?

## பொதுமக்களின் காணிப் பிரச்சினை! நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலகப் பிரதிநிதிகள் கலந்துரையாடல்!



பக்கம்–08

## பண்டோரா ஆவணம் கசிந்தது! லண்டனில் பெறுமதியான நிறுவனங்களை தனதாக்கிய அமைச்சர் டிரன் அலஸ்!!



பக்கம்–02

கடல் கடந்து பல சொத்துக்களை வைத்திருக்கும் நபர்கள் பட்டியலை பண்டோரா ஆவணம் வெளியிட்டுள்ள நிலையில் அதில் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொது பாதுகாப்பு அமைச்சர்

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME
WhatsApp
+94 76 567 3339



# தேசிய தலைவர் பிரபாகரனை நேருக்கு நேர் எதிர்கொண்டேன்! மகிந்த ராஜபக்ச பெருமிதம்!!



**தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேருக்கு நேர் எதிர்கொள்ள எந்தவொரு முன்னாள் தலைவரும் முன்வரவில்லை.**

தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நேருக்கு நேர் எதிர்கொள்ள எந்தவொரு முன்னாள் தலைவரும் முன்வரவில்லை என சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் அதிபருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

எனினும், தமது ஆட்சிக்காலத்தின் பின்னரான காலப்பகுதியில், இலங்கையை ஆட்சி செய்த வேறு எந்தவொரு தலைவரும் யுத்தத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று (15) நடைபெற்ற கட்சியின் தேசிய மாநாட்டில் உரையாற்றும் போதே, அவர் இதனை கூறியுள்ளார்.

### இரண்டாக பிளவுபடவிருந்த இலங்கை

இதன் போது மேலும் தெரிவிக்கையில், "இலங்கையை கடந்த 2005 ஆம் ஆண்டு நான் ஏற்றுக் கொள்ளும் போதும் எமது கட்சி மீது பலர் சேறு பூசினார்கள்.

எனினும், நாடு இரண்டாக பிளவுபடுவதை தடுக்குமாறு மாத்திரமே அன்று மக்கள் எம்மிடம் கோரினார்கள்.

30 வருட யுத்தத்தில், தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை எந்தவொரு தலைவராலும் எதிர்கொள்ள முடியவில்லை.

### யுத்தத்தை நிறுத்துமாறு கோரிக்கை

சில தலைவர்கள் யுத்தத்தை நிறுத்துமாறு கோரி பிரபாகரனுக்கு ஆயுதங்களையும் வழங்கினார்கள்.

அந்த தலைவர் யாரென நான் கூற மாட்டேன். இவ்வாறான யுத்தத்தை சிறிலங்காவின் மற்றுமொரு தலைவர் எதிர்நோக்கும் நிலையை நாம் உருவாக்கவில்லை.

சிங்கள, தமிழ், முஸ்லீம் உள்ளிட்ட அனைத்து மக்களும் சமாதானமாக வாழக்கூடிய நிலையை நாம் ஏற்படுத்தினோம்.

### அரசியல் நோக்கங்களுடன் செயல்படுபவர்கள்

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த போது, குழந்தைகளாக இருந்தவர்கள், தற்போது யுத்தம் என்றால் என்ன என்று தெரியாத வாழ்க்கையை வாழ்கிறார்கள்.

எனினும், மக்களை ஏமாற்றி தங்கள் அரசியல் நோக்கங்களுக்காக செயல்படும் தரப்பினர் இன்றும் இருக்கிறார்கள்.

இவ்வாறானவர்கள் சர்வதேசத்தின் வலைகளில் சிக்கி, தமது சொந்த நாட்டை பாதிப்படைய செய்கிறார்கள்.

### கட்சி மீதான குற்றச்சாட்டு

தமது கட்சியின் ஆட்சி காலத்தில் காணப்பட்ட பொருளாதார நிலை குறித்து தற்போதும் பலர் கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

எம்மை குற்றவாளிகளாக வெளிக்காட்டும் முயற்சிகளில் பலர் ஈடுபடுகிறார்கள்.

2005 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் நாம் நாட்டின் பொருளாதாரத்தை 6 வீதத்தால் வளர்ச்சியடைய செய்திருந்தோம்.

### அரசியல் வழிநடத்தல்

இந்த நிலையில், இலங்கையை சரியான பாதையில் கொண்டு செல்ல சரியானதொரு அரசியல் வழிநடத்தல் தேவை.

சிறிலங்கா பொதுஜன பெரமுன மிக குறுகிய காலத்தில் நாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

இலங்கை நாட்டை யாருடைய சொந்த தேவைக்காகவும் பிளவுபட நாம் இடமளிக்க மாட்டோம்.

### மகிந்த பெருமிதம்

அனைத்து சவால்களையும் எதிர்நோக்கக்கூடிய ஒரே நாடு இலங்கை என்பதை சொல்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

எமக்குள்ள மக்கள் ஆணையுடன் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள தேர்தல்களில் நாம் பங்கெடுப்போம்.

பாரிய வெற்றியையும் அடைவோம். எமது வெற்றி பயணத்தில் பங்கேற்க பல அரசியல் கட்சிகள் ஆர்வமாக காத்திருக்கின்றன" என கூறியுள்ளார்.

## பண்டோரா ஆவணம் கசிந்தது...

கடல் கடந்து பல சொத்துக்களை வைத் திருக்கும் நபர்கள் பட்டியலை பண்டோரா ஆவணம் வெளியிட்டுள்ள நிலையில் அதில் பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் லண்டனில் வர்ஜின் தீவுகளில் உள்ள இரண்டு நிறுவனங்களுக்குச் சொந்தக்காரர் என்பதை புலனாய்வுப் பத்திரிகையாளர்களின் சர்வதேசக் கூட்டமைப்பான பண்டோரா பேப்பர்ஸ் வெளியிட்டுள்ளது.

200 க்கும் மேற்பட்ட நாடுகளில் அரசியல்வாதிகள், பிரபலங்கள், வணிகர்கள் மற்றும் குற்றவாளிகளின் நிதி ஒப்பந்தங்கள் மற்றும் மறைக்கப்பட்ட சொத்துக்களை அம்பலப்படுத்தும் வகையில் பண்டோரா ஆவணம் பல விடயங்களை வெளியிட்டு வருகின்றது.

அதன்படி லண்டனில் 2006 இல் சுமார் 960,000 டொலருக்கு பொது பாதுகாப்பு அமைச்சர் ப்ரொம்டன் ப்ரொப்பர்டீஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தை வாங்கினார் என்றும் 2008 ஆம் ஆண்டு பான்ஹாம் வென்ச்சர்ஸ் லிமிடெட் என்ற இரண்டாவது நிறுவனத்தை வாங்கியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கசிந்த ஆவணங்களில் உள்ள ஒரு அறிவிப்பின்படி, பி.வி.ஐ நிறுவனங்களுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்பட்ட நிதி, ஒரு தொழிலதிபராக டிரன் அலஸ்ஸிடம் இருந்து வந்ததை காட்டுகின்றது.




# தற்காப்புக்கலை பயிற்சியை நிறைவுசெய்த மாணவர்கள்! கரடிப்புலவில், சான்றிதழ் வழங்கி கௌரவிப்பு!!



தற்காப்புக்கலை பயிற்சிநெறி நிறைவுசெய்த மாணவர்களுக்கு செயலமர்வுடன் சான்றிதழ் வழங்கி வைப்பு

ஒருவர் தன்னை ஆபத்தான சந்தர்ப்பத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கென தற்காப்புக் கலைகள் உருவெடுத்தன. இன்று இவைகளில் சில, விளையாட்டுத் துறையில் பிரதான விளையாட்டுக்களாக அறியப்படுவதுடன், உடற் பயிற்சி, தற்காப்பு, சுய ஒழுக்கம், சுயநம்பிக்கை என பல்வேறு காரணங்களுக்காக பலராலும் பயிலப்படுகின்றன.

இன்றைய சூழலில் பாதுகாப்பு குறைவாக காணப்படும் இந்த சமூகத்தில் பயணித்திக் கொண்டிருக்கும் நாம் அதிலும் குறிப்பாக பெண்கள், சிறுவர்கள் போன்றவர்கள் இத்தற்காப்புக் கலைகளை கற்பதென்பது தேவைக்குரிய ஒன்றாக அமைகிறது.

அதன் பொருட்டு ”வணங்காமண் மறுவாழ்வுக் கழகம்” அமைப்பினரது ஏற்பாட்டில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப்பிரிவிற்கு உட்பட்ட கரடிப்பிலவு கிராமத்தை சேர்ந்த 40 சிறுவர்களுக்கு தற்காப்பு கலைகளில் ஒன்றான ”கராத்தே சண்டை கலை” பயிற்சியானது தொடர்ச்சியாக வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது .

இப்பயிற்ச்சி வகுப்புக்களை "Academy of japanese shotokan karate international - (AJSK)" இல் அங்கத்தவர்களாக உள்ள அனுபவம் வாய்ந்த கராத்தே பயிற்சி ஆசிரியர்களைக்கொண்டு பயிற்றுவிக்கப்படுகின்றது.

அதன் தேர்ச்சி மட்ட பயிற்சிகளில் மஞ்சள் பட்டிக்கான (Yellow Belt) பயிற்சிகள் மூன்று மாதங்களாக வழங்கப்பட்டு ஐப்பசி மாதம் முதலாவது தேர்ச்சி மட்டத்தினை நிறைவு செய்த 30 மாணவர்களுக்கு மஞ்சள் பட்டி (Yellow Belt) வழங்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன் தினம்(14) ஏனைய 10 மாணவர்களுக்கான மஞ்சள் நிற பட்டியும், நான்கு மாத பயிற்சியினை நிறைவு செய்த அனைத்து மாணவர்களுக்கும் "Academy of japanese shotokan karate internat ional - (AJSK)" இல் பயிற்றுவிப்பாளர்களாக உள்ள சுகுமார், விஷ்ணுவர்மன், ராஜ்குமார், முகுந்தன், சசிகரன் போன்ற ஆசிரியர்களால் விசேட செயலமர்வு நடத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப் பட்டது

நேற்று முன் தினம் (14) மாலை கரடிப்புலவு கிராமத்தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் வணங்காமண் மறுவாழ்வுக் கழக உறுப்பினர்கள் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெற்றோர் நலன்விரும்பிகள் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்

**சண்முகம் தவசீலன்**











# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரம்! மனித எலும்புக்கூடுகளின் பகுப்பாய்வு இம்மாதம்!!

## அகழ்வுப்பணிகள் அடுத்த வருடம் மார்ச் மாதம்...



கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து தோண்டி யெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடு களின் பகுப்பாய்வு நடவடிக்கை கள் இம்மாதம் 21 ம் 22 ம் திகதிகளில்!அகழ்வுப்பணிகள் அடுத்த வருடம் மார்ச் மாதம்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இருந்து தோண்டி யெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகளின் வயது பாலினம் (ஆண், பெண்) ஆகியவற்றை அடையாளம் காண இம்மாதம் 21 ம் 22 ம் திகதிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.என சட்ட வைத்திய அதிகாரி கனகசபா பதி வாசுதேவா நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசார ணைகள் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (14) முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னி லையில் இடம்பெற்றது.இதன் போதே சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா குறித்த விடயத்தை நீதிமன்றில் தெரிவித் துள்ளார்

குறித்த வழக்கு விசாரணை களின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் அவர்கள் .கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டபோது எதிர்வரும் வருடம் மார்ச் மாதம் இந்த அகழ்வுப் பணி தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்த அகழ்வுப்பணிக்கான செலவுகள் குறிப்பாக வீதி அபிவி ருத்தி அதிகார சபையினால் அந்த வீதி உடைக்கப்பட்டு திருத்தப்படு வதற்கு தேவையான பணம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து



பேசப்பட்டது.

அத்தோடு ஏற்கனவே எடுக்கப் பட்ட 40 மனித எலும்புக் கூடு களில் இருந்து அதனுடைய ஆய்வுகளை, அதன் வயது, அது ஆணா பெண்ணா போன்ற ஆய்வுகளை டிசம்பர் 21 மற்றும் 22ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத் தில் மேற்கொள்வது தொடர்பாக சட்ட வைத்திய அதிகாரி கனகச பாபதி வாசுதேவா அவர்களினால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே திட்டமிட்டபடி மார்ச் மாதம் முதலாம் திகதி வேலை களை ஆரம்பிப்பதற்காக இந்த வழக்கின் மேலதிக நடவடிக்கை களுக்காக வழக்கு எதிர்வரும் மாசி மாதம் 22 ம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

**சண்முகம் தவசீலன்**

# மட்/ கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு, சைவக் குருமார் ஒன்றியத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.









மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு, சைவக் குருமார் ஒன்றியத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சைவக் குருமார் ஒன்றிய தலைவர் சிவஸ்ரீ.கா.கிருஷ்ணப்பிள்ளை தலைமையில் சந்திவெளியிலுள்ள கலாச்சார மண்டபத்தில் வைத்து கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

அத்துடன் சைவக்குருமார்களுக்கான ஒழுக்கத்தை பேணும் பொருட்டும், சங்கத்தினை வளர்ச்சி பாதையில் முன்னெடுக்கும் முகமாக சத்தியப் பிரமாண நிகழ்வும் இடம்பெற்றது.

அதிதிகளாக சிவஸ்ரீ. எம்.சண்முகம் குருக்கள், கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாவு, கல்குடா கல்வி வலய பிரதி கல்விப்பணிப்பாளர் கே.ஜெயவதனன், காலாச்சார உத்தியோகஸ்த்தர் ப.சிவராம் மற்றும் பிரதேச பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் கஜேந்திரகுமாரிற்கு நெருக்கடி! அம்பிட்டிய தேரரால் பதற்றம்!

மட்டக்களப்பு பண்ணையாளர்கள் எதிர் நோக்கு மேய்ச்சல்தரை பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக மயிலத் தமடு பகுதிக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திர குமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் சென்றிருந்த நிலையில், அங்கு வந்த அம்பிட்டிய சுமனரத்ன தேரரால் பதற்ற நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திர குமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரை பொலிஸார் திருப்பி அனுப்பி வைத்தனர்.

அனுமதி வழங்கவில்லை

நேற்று(15) காலை மட்டக்களப்பில் இருந்து பண்ணையாளர்களுடன் குறித்த பகுதிக்குச் சென்ற நிலையில் அப்பகுதி எல்லையில் அமைக்கப்பட்டிருக்கின்ற பொலிஸ் காவலரணுக்கு அருகாமையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து அப்பகுதிக்குள் செல்வதற்கு அனுமதி வழங்கவில்லை.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ் கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஜனாதிபதி செயலாளரிடம் தொலைபேசி அழைப்பின் மூலம் இந்த விடயம் தொடர்பாக கலந்துரை யாடிக் கொண்டிருந்த நிலையில் குறித்த இடத்திற்கு மட்டக்களப்பு மங்களராமய விகாரதிபதி அம் பிட்டிய சுமனரத்ன தேரர் விஜயம் செய்தார்.

இதன் போது சற்று குழப்ப நிலை உருவாகியது அதன் பிற்பாடு குறித்த இடத்தில் இருந்து திரும்பி செல்வதற்கு முன்னர் அம்பிட்டிய சுமனரத்ன தேரர் கூச்சலிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதுவித பதில்களும் தேரரிற்கு தெரிவிக்காமல் அவ்விடத்தில் இருந்து திரும்பி சென்றனர்.

மயிலத்தமடு,மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் அப்பகுதியில் உள்ள சட்ட விரோத குடியேற்றக்காரர்களை வெளியேற்றக்கோரி கடந்த 90 நாளுக்கு மேலாக போராடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.









# பூநகரியில் சுண்ணக்கல் அகழ்வு! மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!



சுண்ணக்கல் அகழ்வில் ஈடுபட்ட ரோக்கியோ நிறுவனத்திற்கு எதிராக. அதனை நிறுத்தக் கோரி பூனகரி பிரதேசத்தின் வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு கிராம மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இன்று ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தின் மூலம் அங்கு சுண்ணக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த ரோக்கியோ நிறுவனத்திற்கு சொந்தமான மூன்று ஜஊ வாகனங்கள் வெளியேற்றப்பட்டது.

குறித்த பிரதேசத்திற்க்கு வருகை தந்த கனியவளங்கள் மற்றும் புவிச்சரிதவியல் திணைக்கள் அதிகாரிகள், வனத்திணைக்களம், பூனகரி பிரதேச செயலகம், பூனகரி பிரதேச சபை அதிகாரிகள் குறித்த பகுதி ஆய்வுக்கு உட்படுத்தவேண்டியுள்ளதால் குறித்த அகழ்வை உடனடியாக நிறுத்துமாறு பணிப்புரை விடுத்திருந்த நிலையில் அகழ்வு பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டிள்ளது.

எனினும் குறித்த சுண்ணக்கல் அகழ்வை நிறுத்தக் கோரி குறித்த பிரதேச மக்கள் பல நாள்களாக போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளத்தில் மூழ்கியது கிளிநொச்சி - இயல்பு வாழ்க்கை பாதிப்பு!



கிளிநொச்சியில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக கண்டாவலைப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தருமபுரம், புளியம்பொக்கனை ஆகிய பகுதிகளில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிலர் தமது இருப்பிடங்களை விட்டு அயலவர், உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அப்பகுதி தொடர்ச்சியாக வெள்ளக் காடாகவே காட்சியளிக்கிறது.

தருமபுரம் மத்தியகல்லூரி, தருமபுரம் இலக்கம் 1 பாடசாலை ஆகியவற்றுக்கு நேற்று (15) விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பிரதேச செயலகம் கிராமசேவையாளர் ஊடாக பாதிக்கப்பட்டவர்களிடம் விபரங்களை சேகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழர் தாயகம் இலங்கையில் எரிந்து கொண்டிருக்கும் போது உலகத் தமிழர் பேரவை பிடில் வாசிக்கின்றதா?



தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் நிரந்தர அரசியல் தீர்வொன்றை நோக்கமாகக் கொண்டு செயற்படும் பல அமைப்புகள் மத்தியில், குளோபல் தமிழ் ஃபோரம் (GTF) எனப்படும் உலகத் தமிழர் பேரவை (உ.த.பே ) வெவ்வேறு புத்த அமைப்புக் களைச் சேர்ந்த மூத்த புத்த பிக்குகள் கொண்ட இலங்கைக்கான "சிறந்த இலங்கை சங்க மன்றத்தை" சந்தித்ததானது, பெரும் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியுள்ளது.

பிரித்தானியர்களிடமிருந்து இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான கடந்த 75 வருடங்களாக தமிழர்கள் படிப்படியாக தங்களுக்கு உரித்தான அனைத்தையும் இழந்து வருகின்றனர். சுதந்திரத்திற்குப் பின்னரான அரசியல் வரலாற்றில் பௌத்த மதகுருமார்களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. இதன் காரணமாகவே, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வு காணும் பொருட்டு தமிழ் மற்றும் சிங்கள அரசியல் தலைவர்களுக்கு இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தாமல் இரத்து செய்யப்பட்டன.

இலங்கைத் தீவில் வரலாற்று ரீதியாக தமிழ் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைச் சுழற்சி மற்றும் இனப்படுகொலைக்கான உறுதியான ஆதாரங்கள் உள்ளன. யார் ஆட்சிக்கு வந்தாலும் சிறிலங்கா அரசானது, நாட்டை ஒற்றை இன, ஒரு மொழி, மற்றும் ஒற்றை மத (mono ethnic> mono lingual> mono religious) சிங்கள பௌத்த நாடாக மாற்றுவதே ஆட்சியாளர்கள் கொள்கையாக கொண்டுள்ளார்கள். இந்த நிலையில் உ.த.பே உடனான சந்திப்பின் பின்னர் பௌத்த மதகுருமார்கள் வெளியிட்ட பிரகடனத்தில் இலங்கையின் பன்முகத்தன்மையை ஏற்றுக் கொண்டிருப்பதாக அறிவித்துள்ளதானது தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தையும் திகைப்பையும் உருவாக்கியுள்ளது. இந்தச் சந்திப்பு தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் அரசியல் யுக்தி கொண்டதா என தமிழ் சமூகம் சந்தேகம் கொள்கின்றது.

எந்தவித கலந்தாலோசனையும் இல்லாமல் ரகசியமாக வைக்கப்பட்ட 'இமயமலைப் பிரகடனம்" தமிழ் மக்களது எரியும் பிரச்சினைக்கு எண்ணை ஊற்றுவதாக உள்ளது. "இமயமலைப் பிரகடனம்" பாதிக்கப்பட்டவர்களுடன் கலந்தாலோசித்து பொதுவெளிக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். இந்தச் சந்திப்புக்கு முன்னர் இந்த விடயம் தமிழர் தரப்பில் எவருடனும் ஆலோசிக்கப்படாமல் திரைமறைவில் அரங்கேற்றப்பட்டுள்ளது.

மறுபுறம் புவுகு இதே போன்ற செயற்பாட்டை 2015 இல் ரணில் விக்ரமசிங்கா பிரதமராக இருந்தபோது அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் ஆரம்பித்து, அது ஒட்டுமொத்த தோல்வியில் முடிந்தது. அதன் முழுமையான செயல்முறையும் இலங்கை அரசால் வசதியாக வடிவமைக்கப்பட்ட ஒரு மாயை என்பதை உணர்ந்து கொள்ள உலகத் தமிழர் பேரவைக்கு (GTF) 5 ஆண்டுகள் பிடித்தது. UNHRC செயல்முறையை இழுத்தடித்து நீர்த்துப் போகச் செய்யவும், கடந்த கால வன்முறைகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்காக சிறிலங்காவினை மறுகட்டமைக்க வேண்டும் என அதிகரித்து வரும் அழுத்தங்களை தந்திரமாக கையாளவும் மைத்திரிபால மற்றும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசாங்கத்திற்கு உலகத் தமிழர் பேரவையின் (GTF) உதவி தேவைப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தொடர்ச்சியாக பதவியிலிருந்த இலங்கை அரசாங்கங்களின் தோல்வியுற்ற கொள்கைகளால் மீண்டும் மீண்டும் வன்முறை தாக்குதல்கள், கொலை, கொள்ளைகள் மற்றும் சொத்துக்கள் அழித்தல், உயர் மட்ட ஊழல், துஷ்பிரயோகம், குற்றத்திற்கான தண்டனையிலிருந்து விலக்களித்தல், பொருளாதார பின்னடைவு, இராணுவமயமாக்கலுக்கான நிதி விரயம், கடன் பொறி, அதீத அதிகார மையமயமாக்கல், சர்வதேச தனிமைப்படுத்தல் மற்றும் பொருளாதார வங்குரோத்து ஆகியவற்றிற்கான மூல காரணங்களை ஆராய்ந்து நிவர்த்தி செய்யாமல் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஆழமாக நோக்காமல் மேலோட்டமாக ஒரு அற்பமான விடயமாக கருதினால் அதற்கான நிலைத்து நிற்கக்கூடிய தீர்வு கிட்டப் போவதில்லை. அரசியலமைப்பு ரீதியாக தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாஷைகளுக்கு தீர்வு காணாமல், அர்த்தமுள்ள எந்த மாற்றங்களும் அங்கு ஏற்படப் போவதில்லை. பௌத்த சிங்கள பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெறாமல், மேற்கொள்ளப்படும் இத்தகைய முயற்சி சிங்கள-பௌத்த மேலாதிக்கம் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் "கல்லிலிருந்து இரத்தம் எடுப்பது"" போன்றதாகும்.

இவர்கள் இனவாதத்தை சிங்கள மக்கள் மீது தூவுவதன் மூலம் நாடாளுமன்றத்திற்குச் செல்வதை உயிர் மூச்சாகக் கொண்டுளனர்.

ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தை ஆராய்ந்து நிகழ் காலத்தை தனக்குச் சாதகமாகக் கையாளுபவர். தமிழர்களின் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்யவும், சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும் GTF இன் சந்திப்பு ரணிலுக்கு வாய்ப்பளிக்கும்.

கடந்த காலத்தை தனக்கு சாதகமாக கையாளும் ரணில் விக்கிரமசிங்கவின் சந்திப்பு, புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுடன் பேசுவதில் வெற்றி என்ற போர்வையில் தமிழர்களின் குரல்களை மூடி மறைத்து சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கு புவுகு இன் சந்திப்பு ரணிலுக்கு வாய்ப்பளித்துள்ளது.

சர்வதேச தலையீட்டை அகற்றி உள்நாட்டின் பொறிமுறைக்குள் முடக்கி விடும் நோக்கோடு உருவாக்கப்பட்ட உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவிற்கான (TRC) சர்வதேச மட்டத்திலான ஆதரவை திரட்டவும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கும் ரணிலுக்கு இது வாய்ப்பளித்துள்ளது..

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் பலவும் நிரந்தர அரசியல் தீர்வுக்காக தீவிரமாக செயல்பட்டு வருகின்றன. 2009 ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்கள் சமாதானத்துடனும், சமத்துவத்துடனும் வாழ்வதற்கான தீர்வினை அடைவதற்காக இந்த அமைப்புக்கள் தங்கள் நேரத்தையும், பணத்தையும், உழைப்பையும் கடுமையாகச் செலவிடுகின்றன. இந்த புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளுக்கு பொறுப்புக் கூறலை வலியுறுத்துகின்றன.

UNHRC இன் கடுமையான தீர்மானங்கள் 46/1 மற்றும் 51/1 இற்கு அமைய இலங்கையை பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதுடன் (Sri Lanka Accountability Project - SLAP), "மேக்னிட்ஸ்கி" (Magnitsky) சட்டம் மற்றும் உலகளாவிய மனித உரிமைகள் தடைச் சட்டம் (Global Human Rights Sanctions Act) போன்றன மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தொடர்ந்து வற்புறுத்துதல், உறுப்பு நாடுகளால் குற்றவாளிகளுக்கு எதிராக சட்டங்களை பயன்படுத்தப்பட வேண்டும் என்று பல புலம்பெயர் தமிழ் அமைப்புகள் வலியுறுத்துகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்து கடந்த 75 வருடங்களாக தமிழ் மக்கள் அனுபவித்து வரும் அவல நிலை பற்றிய சர்வதேச சமூகத்தின் பார்வையில் ஏற்படுத்தப்பட்டு வரும் புரிதலினை புவுகு இன் நடவடிக்கையின் விளைவுகள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தப் போகின்றன.

மிகுதி 07 ஆம் பக்கத்தில்...

# தமிழர் தாயகம் இலங்கையில் எரிந்து கொண்டிருக்கும்...

OHCHR ஆல் மேற்கொள்ளப்பட்டு வரும் இலங்கை மீதான பொறுப்புக்கூறல் திட்டத்தை (SLAP) பாதிப்படையச் செய்கிறார்கள்.
சர்வதேச குற்றவியல் விசாரணை பொறிமுறைக்கு வழிவகுக்கும் அனைத்து முன்னெடுப்புக்களுக்கும் மாற்றாக உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை (வுசுஊ) போன்ற ஒரு உள்ளக செயல்முறைக்குள் அடக்குவதே ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் முயற்சியாகும்.

இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா போன்ற உலகத் தலைவர்களை நேரடியாகத் தலையிடச் செய்யும் முயற்சிகள் ஊடாக சமாதானத்துடனும் நல்லிணக்கத்துடனும் வாழ்வதற்கு தமிழ் மக்களுக்கு நிலையான அரசியல் தீர்வை ஏற்படுத்த வேண்டும், அத்தகைய தீர்வில் அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். கடந்த காலங்களில் உருவான பல ஒப்பந்தங்களை சிங்கள தரப்புகள் ரத்து செய்ததன் அடிப்படையில், அர்த்தமுள்ள அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டறிவதற்கான எந்தவொரு உள்ளக செயல்முறையிலும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

இதன் விளைவாக, புவுகு இன் முயற்சி பாதிப்பைக் கொடுக்கும் என்பதோடல்லாமல் தமிழ் அமைப்புகள் கடந்த 15 ஆண்டுகளாக சிரத்தையுடன் உருவாக்கிய தீர்வுக்கான உத்திகளையும் முயற்சிகளையும் நாசமாக்கிவிடும்.

இலங்கை அரசாங்கமும் ஊடகங்களும் GTF இன் பௌத்த மதகுருமார்களுடனான சந்திப்புக்கள் குறித்து செய்துவரும் விளம்பரங்கள் சர்வதேச சமூகத்திற்கு தவறான செய்தியை பரப்பியுள்ளன. தமிழ் மக்கள் தங்களின் நீண்டகால இன்னல்களுக்கு விடிவு காணப் போராடுகிறார்கள். அதற்கு எதிரானதொரு கருவியாகவே இது பயன்படும். சிங்கள பௌத்தர்களின் தயவில் தமிழர்களை கை விட்டுவிட்டு, இலங்கையில் சர்வதேச சமூகத்தின் தலையீடு இல்லாத கொள்கையை முன்னெடுக்க ரணில் விக்ரமசிங்கே அரசுக்கு வாய்ப்பாகி விடும்.

இந்த வேளை, GTF எந்த விதத்தில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை கேள்விக்குள்ளாக்குவது பொருத்தமானது. புலம்பெயர் தமிழ் 14 அமைப்புக்களின் கூட்டு அமைப்பாக பிரான்சில் புவுகு 2009 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதிலிருந்து, அவற்றில் 13 தமிழ் அமைப்புகள் நாளடைவில் தங்கள் அங்கத்துவத்தை மீளப் பெற்றுவிட்டன.

எனவே, GTF பெரும்பான்மையான புலம்பெயர் அமைப்புகளின் கூட்டு முடிவுகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதே தவறானதாகும். பலத்துடன் செயற்படும் வெவ்வேறு தமிழ் அமைப்புக்கள் ஒன்றிணைந்து இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் நீதியுடன் கூடிய சமாதானத்துடன் வாழ்வதற்கு உலக நாடுகளின் தலையீட்டைக் கோருகிறார்கள். GTF இன் இந்த நடவடிக்கை அந்த ஒற்றுமையை பலவீனபடுத்தி புலம்பெயர் தமிழர்களை பிளவுபடுத்தி சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் இலங்கை அரசின் திட்டத்திற்கு வகை செய்கிறது.

நாம் யதார்த்தமான வகையில் அனைத்துத் தமிழ் அமைப்புக்களும் சர்வதேச சமூகத்துடன் ஒன்றிணைந்து இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் சமாதான சகவாழ்வு மற்றும் நிலைபேறான வளர்ச்சியை அடைவதற்கான காலவரையறையுடன் கூடிய உறுதியான நிரந்தர தீர்வு எட்டப்பட வேண்டியதுதான் தகுந்த வழியாகும்.

# வடக்கில் டெங்கு தாக்கம் அதிகரிப்பு வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி அறிவிப்பு

வடக்கில் கடந்த 12 மாத காலப்பகுதியில் 3100 நபர்களுக்கு டெங்கு நுளம்பின் தாக்கம் எற்பட்டுள்ளதாக வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் டெங்கு நுளம்பின் தாக்கம் பற்றிய ஊடகவியாளர்கள் சந்திப்பு இன்று மாலை நடைபெற்றது.

குறித்த சந்திப்பின் போது கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
குறித்த விடயம் தொடர்பில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்,
வடக்கில் யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நுளம்பின் தாக்கத்தினால் 2600 நோயாளர்களும், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் ஏனைய நோயாளிகளும் இனங்காணப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த ஒரு மாதகாலப்பகுதியில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்துள்ளது. அதன்படி கடந்த வாரத்தில் 02 மரணங்கள் இடம்பெற்றுள்ளது. அதில் ஒருவர் யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்டவர். மற்றையவர் வல்வெட்டித்துறையினை சேர்ந்தவராவார்.

கோப்பாய், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை, கரவெட்டி, ஆகிய பிரதேசங்களில் டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது.

எனவே பொதுமக்கள் தாங்கள் சார்ந்த பொது இடங்களை சுத்தமாக வைத்திருக்க எண்ண வேண்டும். அப்படி நோய் எற்படுகின்ற ஒருவருக்கு தகுதி வாய்ந்த வைத்தியரை நாடுவது சாலச்சிறந்தது.

வட மாகாணத்தில் டெங்கு நுளம்பு தொடர்பான முறைப்பாடுகள் ஆலோசனைகள் தாக்க தொடர்பான விபரங்கள் பற்றிய அறிந்துகொள்ளவும், தெரிவிக்கவும். அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (0761799901) இவை 24 மணித்தியாயல சேவையாக காணப்படுவதுடன், முறைப்பாடுகளை வட்சப் மூலம் வடமாகாண சுகாதார திணைக்களத்திற்கு அறிவிக்கமுடியும் - என அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் வடமாகாண சமூதாய மருத்துவர் ஆலோசகர் ஜீ. ரஜீபன், வட மாகாண பொதுசுகாதார நோய் தடுப்பு இணைப்பாளர் வைத்தியர் ஏ.திலீபன் ஆகியோர்கள் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பொதுமக்களின் காணிப் பிரச்சினை! நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலகப் பிரதிநிதிகள் கலந்துரையாடல்!




பொதுமக்களின் காணிப் பிரச்சினை குறித்து, உண்மை, ஒற்றுமை, நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலகப் பிரதிநிதிகள் கலந்துரையாடல்!

யாழ்ப்பாணத்தில் காணப்படும் காணிப் பிரச்சினைகள் குறித்து, உண்மை, ஒற்றுமை, நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக் குழுவின் இடைக்கால செயலகப் பிரதிநிதிகள், யாழ் மேலதிக மாவட்டச் செயலாளர் (காணி) சிறிமோகனனைச் சந்தித்து கருத்துக்களைக் கேட்டறிந்தனர்.

யாழ் மாவட்ட செயலகத்தில் இந்தச் சந்திப்பு நேற்று (12) நடைபெற்றது.

யாழ் மாவட்டத்தில் வனப் பிரதேசம் என அடையாளப்படுத்தப்பட்டுள்ள தனியார் காணிகள், வேறு காரணங்களுக்காக அரசாங்க வசமுள்ள தனியார் காணிகள் குறித்து பொதுமக்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் இடைக்கால செயலகப் பிரதிநிதிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். இந்த முறைப்பாடுகள் குறித்தும், தற்போதைய காணி நிலவரம் குறித்தும் இடைக்கால செலயகப் பிரதிநிதிகள், மேலதிக மாவட்ட செயலாளரிடம் விரிவாக கேட்டறிந்தனர்.

காணி விவகாரத்தில் பொதுமக்களின் சந்தேகங்கள், கேள்விகள் ஆகியவை குறித்தும் யாழ் மேலதிக மாவட்டச் செயலாளரின் கவனத்திற்கு இடைக்கால செயலகப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவங்ச இதன்போது கொண்டுவந்தார்.

இதுகுறித்து யாழ் மேலதிக மாவட்ட செயலாளரிடமுள்ள காணி விடயங்கள், தரவுகள் குறித்தும் இடைக்கால செயலக அதிகாரிகள் கேட்டறிந்தனர். அத்துடன், காணிப் பிரச்சினைகள் குறித்தும், இதற்கான தீர்வுகள் குறித்தும் மேலதிக செயலாளரின் கருத்துக்களையும் சிபாரிசுகளையும், ஆணைக்குழுவிற்கான சிபாரிசுகளில் உள்ளடக்குவதாக இடைக்கால செயலகப் பணிப்பாளர் நாயகம் இதன்போது தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில், இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவங்சவுடன் இடைக்கால செயலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் நிறைவேற்று அதிகாரி மற்றும் சட்ட விவகாரங்களுக்கான அதிகாரி அஸ்வினி அப்பங்கம, செயலகத்தின் கொள்கைப் பிரிவுத் தலைவர் கலாநிதி தங்கராஜா, பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# முல்லைத்தீவு மாவட்ட கலை,பண்பாட்டு பெருவிழா!

முல்லைத்தீவு மாவட்ட செயலகமும்,வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகமும் இணைந்து ஏற்பாடு செய்த முல்லைத்தீவு மாவட்ட பண்பாட்டு பெருவிழாவானது நேற்று (15) இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலக வாயில் பகுதியில் இருந்து பாரம்பரிய கலை அம்சங்களை தாங்கிய கலாசார பவணியானது கரைத்துறைப்பற்று பிரதேசசபை கலாசார மண்டபத்தை அடைந்து நிகழ்வுகள் சிறப்பாக இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மாகாண பொதுச் சேவை ஆணைகுழுவின் தலைவர் திரு.நா. வேதநாயகன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக வடக்கு மாகாண சுகாதார சுதேச மருத்துவ நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் திரு.க.கனகேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நிகழ்வில் கலை நிகழ்வுகளும், முல்லை சாரல் நூல் வெளியீடும், கலைஞர்கள் கௌரவிப்பும் சிறப்பாக இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி மாலதி முகுந்தன், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள்,பிரதேச சபை செயலாளர்கள்,அரச உயரதிகாரிகள் கலைஞர்கள் கலை ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

